சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581



நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி “தேமதுரத் தமிழோசை உலகமெலாம்” புலனாய்வு நாளிதழ்

www.SAKKRAVIYUGAM.com



TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 182 26.12.2025 FRIDAY MARGAZHI : 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 182 26.12.2025 வெள்ளிக்கிழமை மார்கழி : 11 விலை : ரூ.5/-



3 சிதம்பரம் நடராஜர் கோயில் ஆருத்ரா தரிசன கொடியேற்றம்: ஏராளமான பக்தர்கள் குவிந்து சாமி தரிசனம்

4 அலங்காநல்லூர் 100 நாள் வேலை திட்ட பெயர் மாற்றம் திமுக கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்: வெங்கடேசன் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்

2 சிறுபான்மையினர் வழிபாட்டு தலங்கள், உரிமைகளுக்கு முழுமையான பாதுகாப்பு தேவை: தவெக


## சிறுபான்மையினர் மீதான

# “தாக்குதலை ஏற்க முடியாது”

## முதல்வர் ஸ்டாலின் ஆவேசம்



சென்னை: டிச.26-

சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது; குணமும் இருக்கிறது. பெரும்பான்மை என்ற பெயரில் சில வலதுசாரி வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும் கலவரங்களிலும் ஈடுபடுவது, அதுவும் பிரதமர் மோடி கிறிஸ்துமஸ் விழாவில் பங்கெடுக்கும்போதே ஈடுபடுவது, நாட்டு மக்களுக்குத் தவறான செய்தியையே கொண்டு சேர்க்கும்.

மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் ராய்ப்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய பாஜ அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் 74 சதவீதம் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படும் புள்ளிவிவரங்கள், எதிர்காலம் எதிர்நோக்கியுள்ள ஆபத்துகளை உணர்த்துகிறது.

எனவே, நாட்டுமக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காய நினைக்கும் கலவரக் கும்பல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிட வேண்டியது நம் அனைவரது பொறுப்பும் கடமையுமாகும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சமூகநீதி கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவமாணவிகளுக்கு நடைபெற்ற நல்லோசை களமாடு என்ற பல்திறன் போட்டிகள் மற்றும் கலைக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு, பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் வழங்கினார்.



## தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம், வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

### ஆத்தூர் தொகுதி பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி

சின்னாளபட்டி, டிச.26

கன்னிவாடி பேரூராட்சிக்குட்பட்ட 9வது வார்டு மலைக்கிராமமான தோனிமலையில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம். வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூர் கழக திமுக செயலாளர் இளங்கோவன் தலைமை தாங்கினார். முன்னாள் செயலாளரும், பேரூராட்சி மன்ற தலைவருமான தனலெட்சுமி சண்முகம், அவைத்தலைவர் சர்புதீன், மாவட்ட பிரதிநிதி ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக ஆத்தூர் தொகுதி திமுக தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளரும், மாநில விவசாய அணி இணைச் செயலாளருமான கள்ளிப்பட்டி மணி கலந்து கொண்டு வாக்குசாவடி முகவர்கள் மத்தியில் பேசும்போது இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில்தான் கழகத்தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒத்துழைப்பின் படி பிஎல்2, பில்சி நிர்வாகிகளை தேர்வு செய்து ஆலோசனை வழங்கி வருகிறோம். ஆத்தூர் தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக மீண்டும் ஒரு வரலாற்று சாதனை படைக்க கன்னிவாடி பேரூர் கழக தோனிமலை திமுக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார். கூட்டத்தில் தோனிமலை வார்டு செயலாளர் செல்லத்துரை, பேரூராட்சி வார்டு உறுப்பினர் சித்ரா முத்துவேல், வாக்குசாவடி முகவர் பாலசுப்பிரமணி, ஒன்றிய பிரதிநிதி காளிமுத்து, 12 வது வார்டு செயலாளர் தெய்வேந்திரன், திமுக பிரமுகர் சிவராஜன், பேரூர் கழக மாணவரணி அமைப்பாளரும், ஐ.பியாரின் முரட்டு பக்தருமான சுருளிநாதன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகரம் தமிழக வெற்றிக் கழகம் சார்பாக, தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை தலைவர்களின் ஒருவரான இராணி வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 229வது நினைவு நாளை முன்னிட்டு, திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ். கார்த்திக்ராஜன், ஒட்டன்சத்திரம் நகர செயலாளர் எம்.குருஅருண் அவர்கள் தலைமையில், நகர இணைச் செயலாளர் B.சிவசூர்யா அவர்கள் ஏற்பாட்டில் தாராபுரம் சாலை பழனி மெயின்ரோடு அருகில், அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்தனர். இதில் ஒட்டன்சத்திரம் நகரம் தலைமை நிர்வாகிகள், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், தொப்பம்பட்டி ஒன்றியம், மாவட்ட தொண்டரணி, மாவட்ட மகளிரணி,நகர வார்டு செயலாளர்கள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கிளை கழக செயலாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## எம்ஜிஆர் நினைவு நாளில்...

# அதிமுக மாவட்ட செயலாளர் மிஸ்ஸிங்!



பெரம்பலூர், டிச.26-

அதிமுக நிறுவனர் அமரர் எம்ஜிஆர் நினைவு நாள். அவரின் இறந்த நாளான டிசம்பர் 24ம் தேதி கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அன்றைய தினம் அதிமுக மாவட்ட செயலாளர் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அந்தந்த மாவட்டங்களிலும் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து , மரியாதை செலுத்துவது வழக்கம்.

இந்நிலையில் அதிமுக பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன் எம்ஜிஆர் நினைவு நாளில், பெரம்பலூரிலேயே ஆள் இல்லை. இதனால் பெரம்பலூர் மாவட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணை செயலாளரான முன்னாள் எம்.பி. மருதராஜா தலைமையில், பெரம்பலூர் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் அனைவரும் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதிமுகவின் முக்கிய நிகழ்வான கட்சியின் நிறுவனர் எம்ஜிஆர் நினைவு நாளில், ஒரு மாவட்ட செயலாளரே ஊரில் இல்லை அப்படி என்ன முக்கிய பணி எங்கு சென்றிருக்கிறார் என்று விசாரித்த போது, பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் இந்த முறையும் எம்எல்ஏ சீட் வாங்கி விட வேண்டும் என்று அதி தீவிரமாக காய் நகர்த்தி வருகிறாராம் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன்.

திடீர் திருப்பமாக பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி கூட்டணி கட்சியான பாரதிய ஜனதா கட்சிக்கு ஒதுக்கப்படுவதாக தகவல் வந்து கொண்டிருந்ததால், எம்ஜிஆர் நினைவு நாளில் கூட எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவிக்காமல் சென்னையிலேயே செட்டிலாகி பெரம்பலூர் தொகுதி அதிமுகவிற்கு சீட் ஒதுக்குவதற்காக கட்சியின் முக்கிய தலைகளிடம் சிபாரிசு செய்து கொண்டிருக்கிறாராம் தமிழ்செல்வன்,

தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு இரண்டு கண்ணும் போயிடனும் என்ற கூற்றுக்கு இணங்க, பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தாலும் பரவாயில்லை, ஆனால் வேறு எவருக்கும் சீட் கிடைத்து விட கூடாதென்று ஒற்றை காலில் நிற்கிறாராம் தமிழ்செல்வன்.

தமிழ்செல்வனின் தாந்தோன்றி தனமான மனநிலைக்கு, அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி என்ன விடை கொடுக்க போகிறார் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.



**பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன்**

## திருப்பூர் மாவட்ட பல்சமய நட்புறவு கழகத்தின் சார்பில் கிறிஸ்துமஸ் விழா



திருப்பூர், டிச.26-

திருப்பூர் மாவட்ட பல் சமய நட்புறவு கழகத்தின் சார்பாக மூன்றாம் ஆண்டு கிறிஸ்மஸ் விழா நல்லூர் சி எஸ் ஏ கிறிஸ்தவ தேவ ஆலயத்தின் முன்பு மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இணைந்தெழு தமிழ்நாடு இணை ஒருங்கிணைப்பாளர் எம்.சாதிக் கலந்துகொண்டு கேக் மற்றும் பூ சாக்லேட் கிறிஸ்துவ சகோதர, சகோதரிகளுக்கு வழங்கி கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் ஷாஜகான். மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி சகோதரி ஆஷா.மாவட்ட பொருளாளர் செல்வகுமார். மாவட்டக் கழகப் பேச்சாளர் கருப்புசாமி பாண்டி.ஜமுமுக மாநில அமைப்புச் செயலாளர் பக்கீர் முகமது. மாநகரச் செயலாளர் கேப்டன் பாபு. மாவட்டத் துணைத் தலைவர் நூர் முகமது, மாவட்ட மருத்துவ அணி செயலாளர் பாஷா.வடக்கு காங்கிரஸ் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஜெய்னுல் ஆபிதீன்.மகிளா காங்கிரஸ் துணைத் தலைவர் ஷம்ஷாத், ஒன்றிய தலைவர் சந்திரன் .ஒன்றிய செயலாளர் சதீஷ் .மாநகர பொருளாளர் சேட். சர்புதீன். சித்ரா அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்



# அரையாண்டு தேர்வு விடுமுறை: பழநி முருகன் கோயிலில் குவிந்த பக்தர்கள்

பழநி, டிச.26-

கிறிஸ்துமஸ் பண்டிகை, அரையாண்டு தேர்வு விடுமுறையை முன்னிட்டு பழநி முருகன் கோயிலில் வியாழக் கிழமை (டிச.25) அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனத்துக்காக குவிந்தனர்.

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் கிறிஸ்துமஸ் விடுமுறை, அரையாண்டு தேர்வு என தொடர் விடுமுறையை முன்னிட்டு இன்று (டிச.25) அதிகாலை முதலே வெளி மாவட்டம் மட்டுமின்றி வெளி மாநிலங் களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனத்துக்காக குவிந்தனர். மலைக்கோயிலில் பொது மற்றும் கட்டண தரிசன வரிசையில் 4 மணி நேரத்துக்கும் மேலாக காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

அன்னதானம் வழங்கும் இடத்திலும் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. கூட்டம் அதிகளவில் இருந்ததால் வின்ச் ரயில் மற்றும் ரோப் காரில் செல்ல சுமார் 2 மணி நேரம் வரை வரிசையில் காத்திருக்க நேரிட்டது. பக்தர்கள் வருகை அதிகரிப்பால் மலைக் கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் குடமுழுக்கு நினைவரங்கம் வழியாகவும், கீழே இறங்கும் பக்தர்கள் படிப்பாதை வழியாகவும் அனுமதிக்கப்பட்டனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்த பக்தர்கள் பால் காவடி, மயில் காவடி எடுத்து வந்து தங்கள் நேர்த்திக் கடனை செலுத்தினர். பழநி அடிவாரம், கிரிவலப் பாதையில் திரும்பிய பக்கமெல்லாம் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

தேவஸ்தான இலவச சுற்றுலா பேருந்து நிலையம், பழநி அடிவாரம், பூங்கா சாலை, அருள் ஜோதி வீதி, கொடைக்கானல் சாலை வாகனங்களால் நிரம்பி காணப்பட்டது. பக்தர்கள் வந்த வாகனங்களால் முக்கிய சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பழநி பேருந்து நிலையத்தில் இருந்து வெளியூர் செல்லும் பேருந்துகளில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.

# சிறுபான்மையினர் வழிபாட்டு தலங்கள், உரிமைகளுக்கு முழுமையான பாதுகாப்பு தேவை: தவெக

சென்னை, டிச.26-

“இந்திய அரசியலமைப்புக்கு எதிராக தேவாலயங்கள், கிறிஸ்தவ மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனம். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு முன்வர வேண்டும்” என தவெக செய்தி தொடர்பாளர் ராஜ் மோகன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “அரசியல் ஆதாயத்துக்காக மக்களிடையே பிரிவினையை உண்டாக்கும் பிளவுவாத பாசிச சக்திகளை மக்கள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்.

இந்தியாவின் ஆன்மாவாக விளங்கும் மதச்சார்பின்மையைக் கேள்விக்குறியாக்கும் வகையில், புனிதமான கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் நாட்டின் தலைநகர் டெல்லி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், கிறிஸ்துவ மக்கள் மற்றும் தேவாலயங்கள் மீது பிளவுவாத சக்திகளால் நிகழ்த்தப்பட்டுள்ள மத நல்லிணக்கச் சீர்குலைவுச் சம்பவங்கள் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அளிக்கின்றன.

நமது நாடு அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்துடன் வாழும் ஒரு புண்ணிய பூமி. அன்பையும் சமாதானத்தையும் போதிக்கும் கிறிஸ்துமஸ் நன்னாளில், வழிபாட்டுத் தலங்களிலும் பொது இடங்களிலும் அத்துமீறி நுழைந்து, வன்முறை அணுகுமுறைகளைக் கையாண்டு அச்சுறுத்துவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இத்தகைய செயல்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வழிபாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரானது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும்.


எனவே, இத்தகைய தாக்குதல்களில் ஈடுபட்ட சமூக விரோதிகளை உடனடியாக அடையாளம் கண்டு, அவர்கள் மீது சட்டப்படி பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகளை ஒன்றிய மற்றும் அந்தந்த மாநில அரசுகள் எடுக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு முன்வர வேண்டும். அரசியலமைப்புக்கு எதிராகக் கிறிஸ்தவ மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கடும் கண்டனம்.

மதம் கடந்த மனித நேயமே வலிமையான தேசத்தை உருவாக்கும். தமிழக வெற்றிக் கழகம் எப்போதும் மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் உறுதுணையாக நிற்கும். பிளவுவாத அரசியலை முறியடித்து, மீண்டும் அமைதியும் சகோதரத்துவமும் தழைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்“ இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திட்டக்குடி விவகாரத்துக்கு திமுக அரசே பொறுப்பேற்க வேண்டும்: அன்புமணி

சென்னை, டிச.26-

அரசு பேருந்துகளை முறையாக பராமரிக்காத திமுக அரசு, திட்டக்குடி விபத்துக்கும், உயிரிழப்புகளுக்கும் பொறுப்பேற்று உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “கடலூர் மாவட்டம் திட்டக்குடியை அடுத்த எழுத்தூர் என்ற இடத்தில் திருச்சியில் இருந்து சென்னை வந்து கொண்டிருந்த அரசு விரைவு பேருந்தின் முன்பக்க டயர் வெடித்து சாலைத் தடுப்பை உடைத்து கொண்டு எதிர் திசையில் வந்து கொண்டிருந்த 2 கார்கள் மீது மோதியதில் கார்களில் பயணம் செய்த 9 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு விரைவுப் பேருந்தின் முன்பக்க டயர் வெடித்தது தான் விபத்துக்கு காரணம் ஆகும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் டயர்கள் வெடிக்கும் நிலையில் உள்ளன என்றால் எந்த அளவுக்கு மோசமான நிலையில் அரசுப் பேருந்துகள் பராமரிக்கப் படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பேருந்துகளை முறையாக பராமரிக்காத திமுக அரசு தான் இந்த விபத்துக்கும், உயிரிழப்புகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அன்புமணி கூறியுள்ளார்.

# ஊட்டியில் உறைய வைக்கும் உறைபனி

ஊட்டி, டிச.26-

நீலகிரி மாவட்டம் ஊட்டி மற்றும் குன்னூரில் நடப்பாண்டு அதிகபட்ச பனிப்பொழிவு உள்ளது. பல நாட்களாக இரவு நேர வெப்பநிலை 0 டிகிரியாக நீடித்து வருகிறது. சுற்றுலாப் பயணிகள் அத்துமீறி வனத்துக்குள் நுழைய கூடாது என வனத் துறையினர் எச்சரித்துள்ளனர்.



ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்கள் நீலகிரியில் குளிர்கால சீசனாகும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பருவநிலை மாற்றம் காரணமாக மழை மற்றும் பனி பாதிப்பு தாமதமாக ஏற்படுகிறது. இந்நிலையில், ஊட்டி மற்றும் குன்னூரில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக உறைபனிப்பொழிவு ஏற்பட்டு வருகிறது.

அதிகாலை நேரத்தில் உறை பனிப்பொழிவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்ததற்கு ஏற்ப நேற்று ஊட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளான தலைக்குந்தா, காந்தல் பகுதிகளில் உறைபனி கொட்டிக் கிடந்தது.

ஊட்டி தாவரவியல் பூங்காவில் மைனஸ் 1 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், தலைக்குந்தா பகுதியில் மைனஸ் 2 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையும் பதிவானது. இதன் காரணமாக புல்வெளிகள் மற்றும் வாகனங்கள் மீது வெள்ளைக் கம்பளம் போர்த்தியதுபோல உறைபனி படிந்து, மினி காஷ்மீர்போல ஊட்டி காட்சி அளிக்கிறது.

தொடர்ச்சியாக உறைபனி பெய்வதால், தேயிலைச் செடிகள் மற்றும் பயிர்கள் கருகி வருகின்றன. உள்ளூர் மக்கள் உறைபனியால் திண்டாடி வரும் நிலையில், ஊட்டிக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகள் உறைபனியில் உற்சாகமாக நடந்து சென்று வீடியோ, செல்பி மற்றும் புகைப்படம் எடுத்துக் கொண்டாடுகின்றனர்.

மேலும், உறைபனி காலநிலையை ரசிக்க, சுற்றுலாப் பயணிகள் பலரும் ஊட்டிக்கு ஆர்வமுடன் வருகின்றனர். இதனிடையே, சுற்றுலாப் பயணிகள் சிலர் தடையை மீறி அடர்ந்த வனப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து ‘ஹிடன் ஸ்பாட்’ என சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

மேலும், அடர்ந்த வனப் பகுதிக்குள் நுழைந்து டிரோன் கேமராக்களை பறக்க விட்டு வீடியோவும் பதிவிடுகின்றனர். இந்நிலையில், நீலகிரி வனப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் அத்துமீறி நுழையக் கூடாது என வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊட்டியில் தலைக்குந்தா முதல் பைன் காடுகள் வரை உள்ள வனப் பகுதியில் அத்துமீறி யாரும் நுழையக்கூடாது. வனத்தில் அத்துமீறி ட்ரோன் பயன்படுத்தக் கூடாது என்றும் வனத் துறையினர் எச்சரித்துள்ளனர். தடையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வனத் துறையினர் எச்சரித்துள்ளனர்.



# ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் ஆருத்ரா திருவிழா காப்பு கட்டுதலுடன் தொடக்கம்

ராமேசுவரம், டிச.26-

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் ஆருத்ரா திருவிழா காப்பு கட்டுதலுடன் இன்று (வியாழக்கிழமை) தொடங்கியது.

ராமேசுவரம் ராமநாதசாமி கோயிலில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் ஆருத்ரா திருவிழா கொண்டாடப்படும். இந்த நிலையில் இந்த ஆண்டின் ஆருத்ரா திருவிழா இன்று (வியாழக்கிழமை) இரவு ருத்ராட்ச மண்டபத்தில் அமைந்துள்ள நடராஜருக்கு காப்பு கட்டுதலுடன் தொடங்கியது.

ஆருத்ரா திருவிழாவை முன்னிட்டு இன்றிலிருந்து தினந்தோறும் மாணிக்க வாசகர் தங்க கேடயத்தில் பிரகாரத்தில் உலா வரும் நிகழ்ச்சியும், நடராஜருக்கு தினமும் சிறப்பு மகா தீப ஆராதனை பூஜையும் நடைபெறும். திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக வருகிற டிசம்பர் 27ம் தேதி அன்று அதிகாலை ஆருத்ரா தரிசன நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

# கடலோர காவல்படையில் மாசு கட்டுப்பாட்டு கப்பல் சமுத்ர பிரதாப் இணைப்பு



புதுடெல்லி, டிச.26-

இந்திய கடலோர காவல் படைக்காக கோவா ஷிப்யார்ட் நிறுவனம் ‘சமுத்ர பிரதாப்’ என்ற மாசு கட்டுப்பாட்டு கப்பலை உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கியது. இதுபோன்ற கப்பல் இந்தியாவில் தயாரிக்கப்படுவது இதுவே முதல் முறை. இந்திய கடலோர பகுதிகளில் ஏற்படும் மாசுவை அகற்றுவதற்காக பிரத்யேகமாக இந்த கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலில் ஆயில் பிங்கர் பிரின்டிங் இயந்திரம், ரசாயன கண்டுபிடிப்பு கருவிகள், தீயணைப்பு கருவிகள் மற்றும் மாசுவை அகற்றும் இதர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

# அரசின் புதிய குளிர்சாதன சொகுசு பேருந்துகளின் நவீன வசதிகள், கட்டணம் முழு விவரம்

சென்னை, டிச.26-

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்துக்கு ரூ.34.30 கோடி மதிப்பிலான பல அச்சுகள் கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கப்பட்டு 50ம் ஆண்டு (1976 2025) பொன்விழா நடைபெற்று வருவதையொட்டி போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி வரும் 1 லட்சத்து 5,778 ஊழியர்களுக்கு ரூ.3.33 கோடி மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கிடும் விதமாக 10 போக்குவரத்து ஊழியர்களுக்கு சுவர் கடிகாரங்களை முதல்வர் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு பின் அமைச்சர் சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சிறந்த பயண அனுபவத்தை இப்பேருந்துகள் வழங்கும். 1 கி.மீட்டருக்கு 120 பைசா என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வரவேற்பை பொறுத்து கூடுதல் பேருந்துகள் வாங்குவது குறித்து முடிவெடுக்கப்படும். தற்போது டீசல் பேருந்துகள் இயக்கப்படுகிறது, எதிர்காலத்தில் மின்சார பேருந்துகளும் பயன்பாட்டுக்கு வரலாம். கிளாம்பாக்கத்தில் இருந்து இந்த பேருந்துகள் இயக்கப்படும்.

ஆம்னி பேருந்துகள் நீதிமன்ற ஆணையை பெற்று கோயம்பேட்டில் இருந்து இயக்குகின்றனர். நீதிமன்ற ஆணையின் காலக்கெடு முடிந்த பின் அவர்களும் கிளாம்பாக்கத்தில் இருந்துதான் இயக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர் பாபு, ஆ.ராசா எம்.பி. மேயர் ஆர். பிரியா, துறை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் த.பிரபுசங்கர், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன், விஇ வணிக வாகனங்கள் நிறுவன முதுநிலை துணை தலைவர் சுரேஷ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பேருந்தில் உள்ள நவீன வசதிகள்: புதிய பேருந்துகளில் 2க்கு 2 அமைப்புடன் 51 வசதியான இருக்கைகள், விசாலமான ஜன்னல்கள், மேல்நிலை பொருட்கள் வைக்குமிடம், கால்களை நீட்டி அமரும் வசதியுடன் கூடிய இருக்கைகள், இரட்டை சார்ஜிங் மையங்கள், பாட்டில் ஹோல்டர், காலணி வைக்கும் இடம், முழங்கால் பாதுகாப்பு அமைப்பு, மேம்பட்ட சஸ்பென்சன் அமைப்பு, ஸ்டியரிங் ஸ்டெபிலிட்டி, ஏர் ஸ்பிரிங்குகளில் குறைந்த அழுத்தம், மேம்பட்ட பிரேக்கிங் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள், தீ பாதுகாப்பு அமைப்பு, அவசர நிலையில் விரைவாக பயணிகளை வெளியேற்ற அகலமான ரூஃப் எஸ்கேப் ஹட்ச், முன், பின் மற்றும் பக்க மோதல்களில் தாக்கத்தை குறைக்கும் பாதுகாப்பு அமைப்புகள், விபத்துகளை தவிர்க்க வாகனத்தின் முன் மற்றும் பின் பகுதிகளில் கேமராக்கள், வாகன செயல்திறன் மற்றும் கோளாறுகளை உடனுக்குடன் கண்டறிய மின்னணு அமைப்பு, ரிவர்ஸ் சென்சார் வசதி மற்றும் கேமரா உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இப்பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கட்டண விவரம்: சென்னை மதுரை ரூ.790, சென்னை திருநெல்வேலி ரூ.1,080, சென்னை திருச்செந்தூர் ரூ.1,115, சென்னை சேலம் ரூ.575, சென்னை திருப்பூர் ரூ.800, சென்னை பெங்களூரு ரூ.735, கோவை சென்னை ரூ.880, கோவை பெங்களூரு ரூ.770, நாகர்கோவில் சென்னை ரூ.1,215, திருச்சி சென்னை ரூ.565 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# நூறு நாள் வேலைத் திட்ட பெயர் மாற்றத்தை கண்டித்து திமுக கூட்டணி கட்சித் தலைவர்கள் ஆர்ப்பாட்டம்

காஞ்சி/செங்கை/திருவள்ளூர், டிச.26-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மத்திய அரசு விபி ஜிராம்ஜி என பெயர் மாற்றம் செய்துள்ளது. இதை கண்டித்து திமுக கூட்டணிக் கட்சியினர் காஞ்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத், உத்திரமேரூர், குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 5 ஒன்றிய அலுவலகங்கள் முன்பாக இந்த போராட்டங்கள் நடைபெற்றன.

வாலாஜாபாத் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதேபோல், தாம்பரம் அடுத்த மேடவாகத்தில், திமுக கூட்டணி கட்சிகள் சார்பில், திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், திமுக கூட்டணி கட்சி தலைவர்களான கி.வீரமணி, கே. பாலகிருஷ்ணன், மு.வீரபாண்டியன், தொல்.திருமாவளவன், வைகோ, ஜவாஹிருல்லா, காதர் மொகைதீன், தி.வேல்முருகன், ஈ.ஆர்.ஈஸ்வரன், மற்றும் எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கனிமொழி சோமு மற்றும் திமுக எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல், திருவள்ளூர் மாவட்டத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் நேற்று மத்திய அரசுக்கு எதிராக 31 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், பூந்தமல்லி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணி எம்எல்ஏ சந்திரன், திருவள்ளூர் எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ரமேஷ்ராஜ் உள்ளிட்ட சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்று, மத்திய அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

இதற்கிடையே, முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப்பதிவு: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை மீட்டெடுக்கவும், தங்களது வாழ்வாதாரத்தைக் காத்துக்கொள்ளவும் தமிழகம் முழுவதும் 389 இடங்களில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்த ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

இது தமிழகத்தில் இருந்து ஒலிக்கும் ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கான குரல் என்பதை, அண்ணல் காந்தியின் மீது வெறுப்புணர்வோடு செயல்படும் மத்திய ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

ஏழைகளின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை காப்போம். விபிஜிராம்ஜியை திரும்ப பெறுங்கள். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.




# “10 தொகுதிகளுக்கு கூட விஜய்யால் வேட்பாளர்களை சொல்ல முடியாது” - நயினார் நாகேந்திரன்

கிருஷ்ணகிரி, டிச.26-
“தவெகவில் அரசியல் கட்சிக்கான கட்டமைப்பே கிடையாது. 234 தொகுதிகள் உள்ள நிலையில் விஜய்யால் 10 தொகுதிகளுக்கு கூட வேட்பாளர்களின் பெயரை சொல்ல முடியாது” என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தொகுதிக்கு உட்பட்ட வரட்டனப்பள்ளி ஊராட்சியில் பாஜக சார்பில் நடந்த சிறப்பு கிராமசபை கூட்டத்தில் அக்கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எம்எல்ஏ பங்கேற்று பேசினார். தொடர்ந்து, குந்தாரப்பள்ளியில் உள்ள பாஜக அலுவலகத்தில் அவர் இன்று (டிச.25ம் தேதி) செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை, மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் சந்தித்து பேசினார்.

இதில், தற்போது தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தொடர்பாக பேசப்பட்டது. கட்சிகளுக்கு இட ஒதுக்கீடு தொடர்பாக பேசவில்லை. தற்போது ஓபிஎஸ், தினகரன் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியே உள்ளனர். தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்கள் இருக்கின்றன. அரசியலில் 3 மாதங்களில் எதுவும் நடக்கலாம். 24 மணி நேரத்தில் கூட கூட்டணியில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அரசியலில் மாற்றங்கள் எந்த நேரத்திலும் நடக்கலாம்.

திமுகவுக்கும், தவெகவுக்கும் தான் விஜய் போட்டி என்கிறார். இது சினிமா அல்ல. 234 தொகுதிகளில் உள்ள நிலையில், விஜய்யால், தற்போது 10 வேட்பாளர்கள் பெயரை சொல்ல முடியுமா. கட்சிக்கு பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் இருக்க வேண்டும். தவெகவில் கட்சிக்கான கட்டமைப்பே கிடையாது.

திமுக அரசு மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாத அரசாக உள்ளது. பெட்ரோல், டீசல், எரிவாயு விலையை குறைப்பதாக கூறினார்கள், ஆனால் செய்யவில்லை திமுக தேர்தல் வாக்குறுதியில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றவில்லை. இப்போது, 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் குறித்து பொதுமக்களிடம் தவறான கருத்துகளை பரப்பி வருகின்றனர். 100 நாட்கள் வேலை வாய்ப்பு திட்டம் 125 நாட்களாக பிரதமர் மோடி உயர்த்தி உள்ளார்.

திமுகவினர், 100 நாள் வேலை திட்டத்தில், தனக்கு வேண்டியவர்களுக்கு பணி ஒதுக்கியதுபோல், பணத்தை திருடினர். இனி அது நடக்காது; பயோமெட்ரிக்கில் ரேகை வைத்து முறையாக ஊதியம் பெறலாம்.

100 நாள் வேலை திட்டத்தில் இனி திமுகவினர் கையாடல் பண்ண முடியாது என்பதால் எதிர்க்கின்றனர். ஒரு பொய்யை மீண்டும், மீண்டும் சொல்லி உண்மையென மக்களை திமுகவினர் நம்ப வைக்கின்றனர். தமிழகத்தில் காவல்துறை முதல்வரின் கட்டுப்பாட்டில் இல்லை. 5 ஆண்டுகளில் தமிழகத்தில் கஞ்சா புழக்கம் அதிகமாகி உள்ளது. திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



# பெரியஊர்சேரி கிராமத்தில் அதிமுக சார்பில் எம்ஜிஆர் நினைவு நாள்

அலங்காநல்லூர், டிச.26-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் எம்.ஜி.ஆர் நினைவு நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு அ.இ.அ.தி.மு.க கிளைக் கழகத்தின் சார்பாக ஒன்றிய எம்ஜிஆர் இளைஞரணி இணை செயலாளர் செந்தில்குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில், கிளைக்கழக செயலாளர் சந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி,ஒன்றிய விவசாய அணி துணை செயலாளர் பாலமுருகன், மற்றும் நிர்வாகிகள் ஆறுமுகம், வீரணன், குமரேசன், ஞானசேகரன், பக்கிரி மொகம்மது, கோவில்பிச்சை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தவெக மாவட்டச் செயலாளர் மீது அவதூறு: மதுரை காவல் ஆணையரகத்தில் திரண்ட மகளிரணியினர்

மதுரை, டிச.26-
தவெக மாவட்டச் செயலாளர் மீது அவதூறு பரப்பிய பெண் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அக்கட்சியின் மகளிரணியின் மதுரை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளிக்க திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. மதுரை வடக்கு மாவட்ட தவெக செயலாளராக இருப்பவர் கல்லாணை விஜயன்பன். இவர் கட்சியில் பதவி வழங்க கட்சியினரிடம் பணம் கேட்பதாகவும், பெண் உறுப் பினர்களை மதிக்காமல் கேலி பேசுவதாகவும், அவருக்கு எதிராக புகார் எழுந்தது. இதைக் கண்டித்து மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட விசாலாட்சிபுரம் காளாங்கரை பகுதி தவெகவை சேர்ந்த சக்தி என்ற சத்யா உள்ளிட்ட தொண்டர்கள் விஜயன்பனுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்நிலையில் தவெக வழக்கறிஞர் பிரிவு மாநில இணை அமைப்பாளர் விக்னேஷ் உள்ளிட்ட மகளிரணி நிர்வாகிகள் என 300க்கும் மேற்பட்டோர் சத்யா மீது நடவடிக்கை எடுக்க கோரி மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் திரண்டனர். அவர்களை, போலீஸார் மெயின் நுழைவு வாயிலில் தடுத்தனர். குறிப் பிட்ட நபர்கள் மட்டுமே உள்ளே சென்று ஆணையர் அலுவலகத்தில் தனித்தனியே புகார் அளிக்க அனுமதிக்கப் பட்டனர். அதில் கூறியிருப்பதாவது: ”மதுரை 15வது வார்டு காலாங்கரை பகுதி சத்யா என்பவர் பொதுமக்களிடம் பண மோசடி செய்தவர். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டு உள்ளது. அவரை கட்சியில் சேர்க்காமல் இருந்தோம். ஏற்கெனவே விஜய் மக்கள் இயக்க பெயரைச் சொல்லி பண மோசடியில் ஈடுபட்டதால் நீக்கப்பட்ட நிர்வாகியின் தூண்டுதலில் மாவட்ட செயலாளர் கல்லாணை சாதி பார்த்து பொறுப்பு வழங்குவதாக சத்யா பொய் குற்றச்சாட்டுகளை கூறுகிறார். மாவட்ட செயலாளருக்கும், கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் செயல்படும் சத்யா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர். மகளிரணி நிர்வாகிகள் கூறுகையில், கல்லாணை மீது குற்றம் சாட்டிய சத்யா மீது பல்வேறு மோசடி வழக்குகள் உள்ளன. இதனால் அவரை கட்சியில் சேர்க்கவில்லை. இதை திசை திருப்ப வேறொருவரின் பின்னணியில் செயல்படுகிறார். காவல்துறை அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்லா ணை பெண்களுடன் கண்ணியமாக நடந்து கொள்பவர். அவர் மீது வேண்டும் என்று அவதூறு பரப்புகின்றனர்” என்றனர்.

# சிதம்பரம் நடராஜர் கோயில் ஆருத்ரா தரிசன கொடியேற்றம்: ஏராளமான பக்தர்கள் குவிந்து சாமி தரிசனம்



கடலூர், டிச.26-
சிதம்பரம் நடராஜர் கோயிலில் சிவகாம சுந்தரி சமேத நடராஜ மூர்த்தியின் மார்கழி ஆருத்ரா தரிசன உற்சவ கொடியேற்று விழா இன்று நடைபெற்றது. ஜன.2ம் தேதி வெள்ளிக்கிழமை தேர் திருவிழாவும், ஜன.3ம் தேதி சனிக்கிழமை மார்கழி ஆருத்ரா தரிசனமும் நடைபெறுகிறது.

உலக புகழ் பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம், ஆனி மாதம் ஆனித் திருமஞ்சன தரிசனம் ஆகிய இரு திருவிழாக்கள் வழக்கமாக நடைபெற்று வருகிறது. அதன்படி இந்த ஆண்டு மார்கழி ஆருத்ரா தரிசன உற்சவம் கொடியேற்றம் இன்று (டிச.25) காலை 7.30 மணியில் இருந்து 8.30 மணி வரை நடைபெற்றது.

உற்சவ ஆச்சாரியார் சிவாநாத் தீட்சதர் மேளதாளங்கள் முழங்க தேவாரம் திருவாசகம் ஓதிட, வேத மந்திரங்கள் முழங்கிட கோயில் கொடி மரத்தில் கொடியேற்றினார். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பஞ்சமூர்த்தி கோயில் உட்பிரகாரத்தில் உலா வந்தது. முன்னதாக கொடியேற்றத்தை முன்னிட்டு சிவகாம சுந்தரி சமேத நடராஜ மூர்த்தி சாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

இதனை தொடர்ந்து நாளை (டிச.26) வெள்ளி சந்திர பிரபை வாகனத்தில் சுவாமி வீதி உலாவும், டிச.27ம் தேதி தங்க சூரிய பிரபை வாகனத்தில் சுவாமி வீதி உலாவும், டிச.28ம் தேதி வெள்ளி பூத வாகனத்தில் சுவாமி வீதி உலாவும், டிச.29ம் தேதி வெள்ளி ரிஷப வாகனத்தில் தெருவடைச்சான் வீதி உலாவும், டிச.30ம் தேதி வெள்ளி யானை வாகனத்தில் சுவாமி வீதி உலாவும், டிச.31ம் தேதி தங்க கைலாச வாகனத்தில் சுவமி வீதி உலாவும் நடக்கிறது.

ஜன.1ம் தேதி தங்க ரதத்தில் பிச்சாண்டவர் வெட்டுக் குதிரையில் வீதி உலாவும் நடைபெறுகிறது. ஜன.2ம் தேதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், இரவு 8 மணிக்கு ஆயிரங்கால் முன் முகப்பு மண்டபத்தில் சிவகாம சுந்தரி சமேத நடராஜ மூர்த்தி சாமிகளுக்கு ஏக கால லட்சார்ச்சனை நடைபெறும். ஜன.3ம் தேதி சனிக்கிழமை அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்பு காலை 4 மணி முதல் 6 மணி வரை சிவகாம சுந்தரி சமேத நடராஜ மூர்த்திக்கு மகாபிஷேகம் நடைபெறும்.

பின்னர் காலை 10 மணிக்கு சித் சபையில் ரகசிய பூஜையும், பஞ்சமூர்த்தி வீதி உலா வந்த பின்னர் பிற்பகல் 2 மணிக்கு மேல் ஆருத்ரா தரிசனமும், ஞானகாச சித்சபா பிரவேசமும் நடைபெறுகிறது. ஜன.4ம் தேதி ஞாயிற்றுக் கிழமை பஞ்சமூர்த்தி முத்துப் பல்லக்கு வீதி உலாவும், ஜன.5ம் தேதி திங்கள் கிழமை ஞானப் பிரகாசம் குளத்தில் தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை கோயில் பொது தீட்சிதர்கள் செய்து வருகின்றனர். உற்சவ 10 நாட்களும் மாலை 6 மணிக்கு சாயரட்சை பூஜையில் சித் சபை முன்பு மாணிக்க வாசகரை எழுந்தருளிச் செய்து திருவெம்பாவை உற்சவம் நடைபெறும். கொடியேற்றத்தையொட்டி சிதம்பரம் டிஎஸ்பி பிரதீப் தலைமையில் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.



# டெல்லியில் 2024-25 ஆண்டில் 1,370 வன விலங்குகள் மீட்பு

புதுடெல்லி, டிச.26-
டெல்லி மாநகரில் பசுமைப் பரப்பை வலுப்படுத்தவும், நகர்ப்புற பல்லுயிர்களைப் பாதுகாக்கவும் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், 202425ம் ஆண்டில் சிறுத்தை, பாம்புகள், நீலமான், குரங்குகள், மயில்கள், பறவை இனங்கள் உட்பட 1,370 விலங்குகள் மீட்கப்பட்டுள்ளன. வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்காக பிரத்யேகமான பசுமை உதவி எண் போர்ட்டலை டெல்லி அரசு செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது.

பொதுமக்கள் இதன் வாயிலாக புகாரளிக்கலாம். பசுமை பரப்பு விரிவாக்கத்துக்காக 5,03,672 மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சுமார் 2 லட்சம் மரங்களை நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், ஏழு ஹெக்டேர் பரப்பளவில் மியாவாக்கி காடுகளை உருவாக்கவும் டெல்லி அரசு திட்டமிட்டுள்ளது.

# இளைஞர்களின் சக்தியால் நமது விண்வெளி திட்டம் மேலும் மேம்படும்: இஸ்ரோ குழுவினருக்கு பிரதமர் மோடி, அமித் ஷா வாழ்த்து



புதுடெல்லி, டிச.26-
அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக் கோளை வெற்றிகரமாக ஏவியதற்காக இஸ்ரோ குழுவினருக்கு பிரதமர் மோடியும் மத்திய அமைச்சர் அமித் ஷாவும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூகவலைதளத்தில் கூறியிருப்பதாவது: எல்விஎம்3 ராக்கெட்டின் வெற்றி, உலகளாவிய ராக்கெட் வர்த்தக சந்தையில் இந்தியா வளர்ந்து வருவதை மீண்டும் நிரூபித்துள்ளது. இந்தியாவிலிருந்து மிக அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக் கோள் ப்ளூபேர்ட் பிளாக் 2 அதற்குரிய புவி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது, இந்திய விண்வெளி பயணத்தில் பெருமையான தருணம். அதிக எடையுள்ள செயற்கைக் கோள்களை ஏவும் இந்தியாவின் திறனை இது வலுப்படுத்தியுள்ளது. கடினமாக உழைத்த விண்வெளி விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு வாழ்த்துகள்.

இந்திய இளைஞர்களின் சக்தியால், நமது விண்வெளி திட்டம் மேலும் மேம்படும். எல்விஎம்3 ராக்கெட் ஏவுதல் மூலம் நாம் நமது எதிர்கால ககன்யான் திட்டத்தையும் வலுப்படுத்துகிறோம். நமது திறன் மேம்பாடு, தன்னம்பிக்கைக்கான ஊக்குவிப்பு ஆகியவை வரும் தலைமுறையினருக்கு மிகச் சிறப்பானது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எக்ஸ் தளத்தில், “எல்விஎம் 3எம்6 ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவியதற்காக இஸ்ரோ குழுவினருக்கு வாழ்த்துகள். உலகம் முழுவதும் தகவல் தொடர்பை மேம்படுத்த அமெரிக்க செயற்கைக் கோள் புளூபேர்ட் பிளாக்2 விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது நமது விஞ்ஞானிகளின் திறமையை எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவின் விண்வெளி திறன் வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றுள்ளது. விண்வெளி தொழில்நுட்பத்தின் உலகளாவிய மையமாக இந்தியா மாற வேண்டும் என்ற பிரதமர் மோடியின் தொலைநோக்கு திட்டம் நிறைவேறியுள்ளது’’ என பதிவிட்டுள்ளார்.

# “கொளத்தூர் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு விவகாரத்தில் ஸ்டாலின் பொறுப்போடு செயல்பட வேண்டும்” - தமிழக பாஜக

சென்னை, டிச.26-
முதல்வர் ஸ்டாலின் தனது கொளத்தூர் தொகுதி மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என தமிழக பாஜக செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் தேவராஜ் சென்னை உயர் நீதிமன்றத்தில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பெரவள்ளூர் பகுதியை சுற்றியுள்ள ஏறத்தாழ 350 ஏக்கர் நிலம், வண்ணான் குளம் நீர் நிலை மற்றும் பல்வேறு குளம், குட்டை, அரசு புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில், அதில், சென்னை உயர்நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

சென்னை, கொளத் தூரில் உள்ள வண்ணான்குளம் ஏரி ஆக்கிர மிப்புகளை வருவாய்த் துறை, குடிசை மாற்று வாரியம், சென்னை மாநகராட்சிக்கு ஆக்கிரமிப்புகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து அகற்ற வேண்டும் என்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்ஸ்ரீ வச்சவா, நீதிபதி அருள்முருகன் அடங்கிய அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் வருவாய்துறை, குடிசை மாற்று வாரியம், சென்னை மாநகராட்சிக்கு உரிய வழிகாட்டுதல் வழங்க வேண்டும்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள நீர் நிலைகள் ஆக்கிரமிப்பு விஷயங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டமன்ற உறுப்பினராக முதல்வராக தார்மீக பொறுப்பேற்று நேரிடையாக தலையிட்டு தீர்வு காண வேண்டும்.

உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற இரு மற்றும் பல்வேறு நீதிபதிகள் அடங்கிய அமர்வுகள் கடந்த காலங்களில் நீர் நிலைகள் ஆக்கிரமிப்பு விஷயங்களில் சமரசம் இல்லாமல் அனைத்து அரசு துறைகளும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் விரைந்து செயல்பட வேண்டும் என்று தீர்ப்புகள் வழங்கியிருக்கின்றன.

ஆனாலும், நீதிமன்றத் தீர்ப்புகளை மதிக்காமல் அவமதிக்கும் வகையில், உரிய நடவடிக்கைகள் எடுக்காமல் திமுக அரசு தொடர்ந்து காலம் தாழ்த்தி வருவது துரதிஷ்டவசமானது.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மருத்துவமனைகள், விளையாட்டுத் திடல்கள், பேருந்து நிலையங்கள் போன்றவை 2021 முதல் 2025 ஆண்டு காலகட்டத்தில் ஒரு சராசரி சட்டமன்ற உறுப்பினராக முதல்வர் ஸ்டாலின் மேம்படுத்தி இருப்பதற்கு எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், அதே நேரத்தில் மக்களின் நீண்ட கால கோரிக்கையான பெரம்பூர் சர்ச் முதல் ரெட்டேரி ஜங்ஷன் வரை பேப்பர் மில்ஸ் சாலையை அகலப்படுத்துவேன் என்று 15 ஆண்டுகளாக கொடுத்த வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை. மேலும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மழைக்காலங்களில்

தண்ணீர் சேமித்து வைக்கும் கேட்ச்மெண்ட் பாயிண்டுகளாக விளங்கும் பல்வேறு குளம், குட்டை, ஏரிகளை தற்போது திமுகவில் இருக்கும் சிறுசேமிப்பு குழு தலைவர் புரசை ரங்கநாதன் திமுக கூட்டணியில் எம்எல்ஏவாக இருந்தபோது, காங்கிரஸ் மற்றும் திமுகவினர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை முதல்வர் மு.க.ஸ்டாலின் அகற்ற வேண்டும் என்று பாஜக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

முதல்வர் ஸ்டாலின் 2011-ம் ஆண்டு கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள நீர்நிலை ஆக்கிரமிப்புகள் முற்றிலுமாக அகற்றப்படும். குளம், குட்டை, ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் முற்றிலுமாக அகற்றப்பட்டு தூர்வாரப்படும். கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் குடிநீர் ஆதாரம் பாதுகாக்கப்படும் என்று அளித்த வாக்குறுதிகள் கடந்த 15 ஆண்டுகளாக நிறைவேற்றப்படவில்லை.

நீதிமன்றங்கள் பலமுறை நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் என்று பல்வேறு தீர்ப்புகளில் கடுமையான உத்தரவுகள் பிறப்பித்துள்ள போதும் முதல்வர் மு.க.ஸ்டாலின், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக எதிர்க்கட்சியில் இருந்த போதும், தற்போது ஆளுங்கட்சியில் முதல்வராக இருகின்ற போதும் எந்த விதமான முன்னெடுப்பும் எடுக்கவில்லை.

எனவே தற்பொழுது முதல்வர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நீர்நிலை ஆக்கிரமிப்பு விஷயத்தில் சட்டமன்ற உறுப்பினராக, மாநில முதல்வராக, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை போர்க்கால அடிப்படையில் நிறை வேற்றி ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று தமிழக பாஜக சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ திசையன்விளை தெற்கு தெரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் வளர்பிறை சஷ்டி திதியை முன்னிட்டு, இந்து முன்னணி பேரியக்கம் சார்பில் வேல் பூஜை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெண்கள் தங்கள் கைகளால் வேலுக்கு பால் அபிஷேகம் செய்தனர். மதுரையில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாடு தீர்மானத்தின்படி, அனைவரும் சேர்ந்து கந்தசஷ்டி பாடல் பாடினர். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீப தூணில் தீபம் ஏற்றுவதற்கு, தமிழக அரசுக்கு நல்ல புத்தி வழங்கிட, தமிழ் கடவுள் முருகப்பெருமானிடம் முறையிட்டனர். இந்த நிகழ்ச்சியில் இந்து முன்னணி மாவட்ட செயலாளர் விக்னேஷ் தலைமை வகித்தார். ராஷ்ட்ரிய சமிதி பொறுப்பாளர்கள் அமுதா அவர்கள் வழி நடத்தினார்கள். மேலும் இந்து முன்னணி மாவட்ட செயற்குழு உறுப்பினர் செந்தில், ஒன்றிய பொது செயலாளர் ராஜா, திசை நகர தலைவர் அழகேஸ்வரன், நகர பொது செயலாளர் மணிகண்டன், RSS நிர்வாகி ஜெயசீலன், பாஜக சத்திய கேந்திரம் பொறுப்பாளர் ராஜ்குமார் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# சின்னாளபட்டி சித்தி விநாயகர் அய்யப்பன் கோவில் மண்டல பூஜை

சின்னாளபட்டி, டிச.26-


திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி கீழக்கோட்டை அருள்மிகு லிங்குசுவாமி கோவில் பின்புறம் அமைந்துள்ளது அருள்மிகு சித்திவிநாயகர் அய்யப்பன் மணிமண்டப திருக்கோவில் ஒவ்வொரு வருடமும் அய்யப்ப பக்தர்கள் மாலை அணிந்து சபரிமலைக்கு செல்வது வழக்கம். இவ்வருடம் மண்டல பூஜையை முன்னிட்டு கணபதி ஹோமத்துடன் பூஜை ஆரம்பமானது. அப்போது பெண்கள் குத்துவிளக்கை அலங்காரம் செய்து, திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்டனர். அதன் பின்னர்

18 படிகளுக்கும் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு சுவாமி அய்யப்பனுக்கு 16 வகையான அபிசேகம் செய்தனர். அதன் பின்னர் நடைபெற்ற மாபெரும் அண்ணதானத்தில் சின்னாளபட்டி அனைத்து பகுதிகளிலும் இருந்து வந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். யாகசாலை பூஜைகளை சிவாச்சாரியார் சுரேஷ் தலைமையில், ஜெகநாதன் கிருபா குருக்கள் செய்திருந்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை சித்தி விநாயகர் அய்யப்பன் கோவில் தலைமை குருநாதன் மோகன் தலைமையில், கோவில் குருசாமி மாரியப்பன், செயலாளர் குணசேகரன், பொருளாளர் சின்னமாரி, கணக்கர் மணிமாறன், இளைஞரணியைச் சேர்ந்த பிரசன்னா மோகன், சேகர், பெரியமாரி, முருகன், பூசாரி விருமாண்டி, முத்து, ராஜதுரை தலைமையிலான விழா கமிட்டியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



■ தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஜமீன்தாரினி காமுலம்மாள் நினைவு மேல்நிலைப்பள்ளியில் சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான குளிர்கால சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தொடங்கி வைத்தார்.



■ தேனி மாவட்டம் கம்பத்தில் நமது மக்கள் முன்னேற்ற கழகத்தின் மனிதநேயர் நிறுவனத் தலைவர் பி எல் ஏ ஜெகநாத் மிஸ்ரா அவர்களது ஐம்பதாவது அகவை தின விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இரத்ததானம் மற்றும் நலத்திட்ட உதவிகளும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் திரளான தொண்டர்களும்,500க்கும் மேற்பட்ட பொதுமக்களும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# அலங்காநல்லூர் 100 நாள் வேலை திட்ட பெயர் மாற்றம் திமுக கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்: வெங்கடேசன் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்

அலங்காநல்லூர். டிச.26-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் 100 நாள் வேலை திட்டத்தின் பெயர் மாற்றியதற்கு மத்திய அரசை கண்டித்து திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் யூனியன் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு, ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். மத்திய அரசு திமுக கொண்டு வரும் அனைத்து திட்டங்களையும் முடக்க நினைக்கிறது. காங்கிரஸ் கொண்டு வந்த திட்டமான 100 நாள் வேலை திட்டத்தினை கொண்டுவரப்பட்டது.



ஆனால் இப்பொழுதுகாந்தி பெயரை மாற்றி அவர்கள் இஷ்டத்திற்கு ஏதோ பெயர் வைத்து நடத்த நினைக்கின்றனர் தமிழக முதல்வர் தலைமையில் அதனை முறியடித்து ஜனநாயகத்தை காப்பாற்ற பாடுபடுவோம் என்று தெரிவித்தார்.

இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள்தனராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், ஒன்றிய துணைச் செயலாளர் கார்த்திகேயன்,

ஒன்றிய பொருளாளர் சுந்தர்ராஜன், நகர செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ், சுமதிபாண்டியராஜன், துணைத்தலைவர் சுவாமிநாதன், முன்னாள் பேரூராட்சி தலைவர் அழகு உமாபெரியசாமி, முன்னாள் யூனியன் துணைத் தலைவர் சங்கீதாமணிமாறன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, தண்டலை சரவணன், காயத்ரி இதயச்சந்திரன், ஈஸ்வரி சீனிவாசன் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் வட்டாரத் தலைவர்கள் சுப்பாராயலு ,காந்தி, மக்கள் நீதி மய்யம் சோழவந்தான் மாவட்ட செயலாளர் மெடிக்கல் ரமேஷ், ஒன்றிய செயலாளர் ரவி, மதிமுக மாவட்ட செயலாளர் குலமங்கலம் மார்நாடு, ஒன்றிய செயலாளர் பாஸ்கரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் குமரேசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் தவமணி, கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் அலெக்ஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் சிந்தனைவளவன் ஒன்றிய செயலாளர் பாலமுருகன் எஸ்டிபிஐ கட்சியின் தொகுதி தலைவர் ரகுமான், ஆதித்தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் சரவணன், தமிழ் புலிகள் மாவட்டச் செயலாளர் சிங்கபாண்டி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.12,015 கோடியில் டெல்லி மெட்ரோ ரயில்: மத்திய அரசு ஒப்புதல்

புதுடெல்லி, டிச.26-

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின்னர் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

டெல்லி மெட்ரோவின் 5(ஏ)ம் கட்ட திட்டத்தின் கீழ் 3 புதிய வழித்தடங்களை கட்ட மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது. இந்த திட்டம் 3 ஆண்டுகளில் முடிக்கப்படும். இந்த திட்டம் ரூ.12,014.91 கோடியில் செயல்படுத்தப்படும். இதற்கான நிதியை, மத்திய அரசு, டெல்லி அரசு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் வழங்கும். இவ்வாறு அவர் கூறினார்.



## கோவை அருகே மீட்கப்பட்ட கருஞ்சிறுத்தை குட்டி உயிரிழப்பு

கோவை, டிச.26-

மருதமலை அருகே மீட்கப்பட்ட கருஞ்சிறுத்தைக் குட்டி உயிரிழப்பு விவகாரம் தொடர்பாக வனத்துறையினர் அதிகாரிகளிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை மாவட்டம் வனக்கோட்டம் தடாகம் பிரிவு மருதமலை சுற்றுக்குட்பட்ட மருதமலை அடிவாரம் பகுதியில் நேற்று காணப்பட்ட சிறுத்தைக் குட்டி வனத்துறையினரால் மீட்கப்பட்டு இயற்கை கற்களால் கட்டப்பட்ட குகை போன்ற அமைப்பில் வைத்து தாயினுடன் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறும்போது, ”கண்காணிப்புப் பணி தொடர்ந்த நிலையில் இன்று காலை 5 மணியளவில் கருஞ்சிறுத்தை குட்டி குகையில் பார்த்தப்போது அங்கு குட்டி இல்லை. அதிகாலை சுமார் 1.45 மற்றும் 4.30 மணி அளவில் இரண்டு சிறுத்தைகள் சிறுத்தை குட்டி இருக்கும் குகையின் அருகே வந்து சென்றுள்ளன. அதைத் தொடர்ந்து காலை 4:30 மணியளவில் சிறுத்தை குட்டி குகையை விட்டு வெளியே சென்றது தெரியவந்தது.

இரண்டு குழுக்கள் வனப்பகுதியில் சிறுத்தையை தேடும் பணியில் ஈடுப்பட்டன. காலை 5.30 மணியளவில் இயற்கையாக அமைக்கப்பட்ட குகையில் இருந்து 300 மீட்டர் தொலைவில் படுத்த நிலையில் கருஞ்சிறுத்தைக் குட்டி கிடந்துள்ளது. தணிக்கை செய்த போது குட்டி இறந்துள்ளது தெரியவந்தது. பிரேதப் பரிசோதனைக்கு பின்பு தான் இறப்பிற்கான காரணம் தெரியவரும் என, வனத்துறையினர் தெரிவித்தனர்.



## தண்டவாளத்தில் நின்ற ஆட்டோ: வந்தே பாரத் ரயில் தப்பியது

திருவனந்தபுரம், டிச.26-

கேரள மாநிலம் காசர்கோடு திருவனந்தபுரம் வந்தே பாரத் ரயில் (20633) கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சென்று கொண்டிருந்தது.

அகத்துமுரி ஹால்ட் ரயில் நிலையம் அருகே சென்று கொண்டிருந்த போது தண்டவாளத்தில் ஒரு ஆட்டோ அநாதையாக நிற்பதை ரயில் ஓட்டுநர் கவனித்து விட்டார். அப்போது மணி இரவு 10.10. உடனடியாக எமர்ஜென்சி பிரேக்கை ஓட்டுநர் இயக்கினார். அதிர்ஷ்டவசமாக ஆட்டோ மீது ரயில் மோதாமல் நின்றது.

பின்னர் ரயில்வே பாதுகாப்புப் படை போலீஸார், அதிகாரிகள் ஆகியோர் சென்று ஆட்டோவை அப்புறப்படுத்தினர். இந்த சம்பவத்தில் ஆட்டோ ஓட்டுநர் சுதி என்பவரை போலீஸார் விசாரணைக்கு அழைத்து சென்றனர். அவர் மது போதையில் இருந்ததாக கூறப்படுகிறது.




## மத்திய அரசை கண்டித்து பெருமாநல்லூரில் திமுக. கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், டிச.26-

காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு நூறுநாள் திட்டத்தின் பெயரை மாற்றி திட்டத்தை நீர்த்துப் போகிற முயற்சியை செய்த மத்திய அரசை கண்டித்து, திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை யிலான கூட்டணி கட்சிகளின் சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திமுக திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் மேயர் தினேஷ்குமார் முன்னிலை வகித்தார்.

ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திமுக தலைமை யிலான கூட்டணி கட்சியினர் பாஜக அரசின் தவறான கொள்கைகளை கண்டித்து கண்டனம் முழக்கங்களை எழுப்பியும் மத்திய அரசுக்கு எதிரான கண்டன பதாகைகளை ஏந்தியும் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கலந்து கொண்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. வடக்கு மாநகர செயலாளர் தங்கராஜ், மாநில மகளிர் பிரச்சார அணி செயலாளர் உமா மகேஸ்வரி, காங்கிரஸ் கட்சியின் மாநகர் மாவட்ட தலைவர். கிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநகர் மாவட்டசெயலாளர்.மூர்த்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றிய செயலாளர் சந்திரமூர்த்தி, சிபிஎம் அப்புசாமி, மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் அபுசாலி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி மோகன்ராஜ். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் இப்ராஹிம் மற்றும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆனந்தகுமார்.

மக்கள் நீதி மையம் ராஜ முகமது.திமுக ஒன்றிய நிர்வாகிகள் சிடிசி வேலுசாமி, பழனி சாமி,மணிமுத்து,மணி,சிவசாமி,கோவிந்தசாமி,வேல்முருகன்,கிரண்ராஜ் ,தமிழ்செல்வன்,மீனாள மின்னல்கொடி,மாதேஸ்வரன்,சாமுவேல், மணி,திருமூர்த்தி,வேலாயுதம், அண்ணதுரை, கண்ணப்பன், சாந்தாமணி, திமுக கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் 500க்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## எச்1பி விசா வழங்க புதிய நடைமுறை அமல்: அமெரிக்காவின் முடிவால் இந்தியர்களுக்கு சிக்கல்

வாஷிங்டன், டிச.26-

குலுக்கல் முறைக்கு பதிலாக, எச்1பி விசா வழங்க புதிய முன்னுரிமை நடைமுறையை அமல்படுத்த அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது இந்தியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது.

அமெரிக்காவில் வெளிநாட்டினர் தற்காலிகமாக தங்கி வேலை செய்வதற்காக எச்1பி விசா வழங்கப்படுகிறது. குறிப்பாக, தொழில்நுட்ப நிறுவனங்கள் (ஐ.டி) திறமையான வெளிநாட்டு ஊழியர்களை பணியமர்த்த இந்த விசா பயன்படுகிறது. இப்போது குலுக்கல் முறையில் இந்த விசா வழங்கப்படுகிறது. எச்1பி விசா பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் ஆவர்.

இந்த சூழ்நிலையில், அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற பிறகு, அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பை பறிப்பதாகக் கூறி எச்1பி விசா நடைமுறையில் கடும் கட்டுப்பாடுகளை விதித்து வருகிறார். குறிப்பாக, விசா கட்டணத்தை 1 லட்சம் டாலராக (ரூ.90 லட்சம்) சமீபத்தில் உயர்த்தினார்.

இந்நிலையில் அதிபர் ட்ரம்ப் நிர்வாகம், நீண்டகாலமாக நடைமுறையில் இருந்த எச்1பி பணி விசா குலுக்கல் முறைக்கு பதிலாக புதிய முன்னுரிமை நடைமுறையைக் கொண்டுவர உள்ளது. குறிப்பாக, விண்ணப்பதாரர்களின் அதிக திறமை மற்றும் அதிக ஊதியம் பெறும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கும் புதிய ‘வெயிட்டடு அப்ரோச்’ முறை நடைமுறைக்கு வரும். இது இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தொடக்க நிலை பணியாளர்கள் அமெரிக்காவில் வேலை விசா பெறுவதைக் கடினமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறையின் அதிகாரப்பூர்வ அறிவிப் பின்படி, இந்த புதிய நடைமுறையானது 2026ம் ஆண்டு பிப்ரவரி 27 முதல் நடைமுறைக்கு வருகிறது. இது 2027ம் நிதியாண்டுக்கான விசா பதிவு காலத்தில் தொடங்கி ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் எச்1பி விசாக்களின் விநியோகத்தை முறைப்படுத்தும்.

இதுகுறித்து அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ டிராகேசர் கூறும்போது, “தற்போது நடைமுறையில் உள்ள எச்1பி பதிவுகளுக்கான தன்னிச்சையான குலுக்கல் முறை, அமெரிக்க முதலாளிகளால் தவறாக பயன்படுத்தப்பட்டது. அமெரிக்கர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை விட குறைவான ஊதியத்தில் வெளிநாட்டு பணியாளர்களை இறக்குமதி செய்வதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு, இந்த முறையை துஷ்பிரயோகம் செய்தனர். இதனால் இந்த முறையில் மாற்றம் கொண்டுவரப்பட உள்ளது’’ என்றார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000